இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 31-05-2025

# பழனிசாமி அலைகிறார்

**சென்னையில் ஒரு மாணவி மீது நடத்தப்பட்ட பாலியல் வன்கொடுமை என்பது மாபெரும் கொடூரம் ஆகும். அந்தக் கொடூரம் நடந்த 157 நாட்களுக்குள் குற்றவாளி ஞானசேகரனுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத்தந்துள்ளது தமிழ்நாடு காவல்துறை. இது பொதுமக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது. 'தாமதிக்கப்பட்ட நீதி - மறுக்கப்பட்ட நீதியாக மாறும்' என்பார்கள். அப்படி ஆகாமல் துரிதமாக வழக்கின் விசாரணையை முடித்து தண்டனை வழங்கப் பட்டுள்ளது. இதனை பழனிசாமியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.**

அவர் பொறுப்பான எதிர்க்கட்சித் தலைவராக இல்லை. ஏதோ ஒன்று அவரை பிடித்து ஆட்டிக் கொண்டு இருக்கிறது. சொந்தக் கட்சியில் தனக்கு ஏற்பட்டு வரும் நெருக்கடியை மறைக்க தி.மு.க. ஆட்சி மீது தினந்தோறும் பாய்ந்து கொண்டிருக்கிறார்.

நாளிதழ்களில் க்ரைம் ரிப்போர்ட்டர்கள் இருப்பார்கள். அவர்களைப் பற்றி ஒரு ஜோக் உண்டு.ஏதாவது க்ரைம் நடந்தால்தான், அதை அவர் நியூஸ் ஆக்குவார். க்ரைம் நடக்கவில்லை என்றால் அவரது நியூஸ், நாளிதழில் வராது. அதனால் தினந்தோறும் காலையில் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்துக்கு போன் செய்வாராம் அந்த ரிப்போர்ட்டர். ரைட்டர் போன் எடுப்பார்.

'ஏதாவது கொலை இருக்கா?' என்று ரிப்போர்ட்டர் கேட்டார்.

'இல்லை' என்பார் ரைட்டர்.

'திருட்டு இருக்கா?' என்று ரிப்போர்ட்டர் கேட்டார்.

'இல்லை' என்பார் ரைட்டர்.

'செயின் பறிப்பாவது இருக்கா?' என்று ரிப்போர்ட்டர் கேட்டார்.

'இல்லை' என்பார் ரைட்டர்.

'தற்கொலை ஏதாவது இருக்கா?' என்று ரிப்போர்ட்டர் கேட்டார்.

'இல்லையே' என்பார் ரைட்டர்.

கடைசியில் வெறுத்துப் போன ரிப்போர்ட்டர், 'பாம்பு கடியிலையாவது யாராவது சாகலையா?' என்று கேட்பாராம். **அந்த கிரைம் ரிப்போர்ட்டர் மாதிரி தினந்தோறும் ஏதாவது நியூஸ் கிடைக்காதா என்று காத்துக் கிடக்கிறார் பழனிசாமி.**

சென்னை சம்பவத்துக்கு உரிய நீதி உடனடியாக வாங்கித் தந்ததைக் கூட பழனிசாமியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதற்கும் தி.மு.க. அரசு மீது பாய்கிறார்.

24.12.2024 அன்று பிற்பகல் மாணவி ஒருவர் அளித்த புகாரின் அடிப்படையில் கோட்டூர்புரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உடனடியாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. உடனடியாக தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மறுநாள் 25.12.2024 அன்று காலை இச்சம்பவத்தில் ஈடுபட்ட கோட்டூர்புரம் காவல் நிலைய சரித்திரப் பதிவேடு போக்கிரியான ஞானசேகரன் கைது செய்யப்பட்டார். இதுதான் காவல் துறை எடுத்த துரிதமான நடவடிக்கை ஆகும். இந்த புகார் தொடர்பான முதல் தகவல் அறிக்கை சமூக ஊடகங்களில் வெளியானது. இது NIC-ல் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறின் காரணமாகவே என நேஷனல் இன்பர்மேடிக்ஸ் சென்டர் விளக்கியுள்ளது. சம்பவம் நடந்த வளாகத்தில் - குறிப்பாக இச்சம்பவம் நடைபெற்ற இடத்தை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்த கண்காணிப்புக் கேமிராக்கள் உதவியுடன்தான் குற்றவாளி அடையாளம் காணப்பட்டு - அதனடிப்படையில் காவல்துறை நடத்திய விசாரணையில் குற்றவாளி கைது செய்யப்பட்டார். உடனடியாக அவர் குண்டர் தடுப்புச் சட்டத்திலும் அடைக்கப்பட்டார்.

இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்தது. இவர்களும் தமிழ்நாடு காவல் துறைதான். சி.பி.ஐ. அல்ல. இது கூட தற்குறி பழனிசாமிக்குத் தெரியவில்லை.

**சென்னை மாணவி விவகாரத்தில் மட்டுமின்றி, எந்த பாலியல் வன்கொடுமை புகாரிலும் தமிழ்நாடு அரசு வேடிக்கை பார்க்கவில்லை. ஆனால் தன்னைப் போலவே மற்றவர்களையும் நினைத்துக் கொள்கிறார் பழனிசாமி. "பொள்ளாச்சி சம்பவத்துக்கு ஆதாரம் எங்கே?" என்று நிருபர்களைப் பார்த்துக் கேட்டவர் தான் பழனிசாமி.**

பொள்ளாச்சியில் நடந்தது ஒரே ஒரு பாலியல் சம்பவம் அல்ல, தொடர்ச்சியாக பாலியல் வன்கொடுமைகளை இரண்டு ஆண்டுகாலமாக ஒரு கும்பல் செய்து வந்துள்ளது. இதன் மீது அன்றைய அ.தி.மு.க. ஆட்சி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சி.பி.ஐ. வசம் இந்த வழக்கு சென்றபிறகு தான் உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்தது.

பொள்ளாச்சி சம்பவமே அ.தி.மு.க. பிரமுகர்களால்தான் நடந்தப்பட்டது என்பதை சி.பி.ஐ. இப்போது நிரூபித்துள்ளது. இதன் பிறகும் வெட்கம் இல்லாமல் பழனிசாமி அறிக்கைகள் வெளியிட்டுக் கொண்டு இருக்கிறார்.

அ.தி.மு.க. ஆட்சியில் பெண்களை வசியப்படுத்த 'பெய்டு கேங்' என்ற ஒரு கும்பல் செயல்படுவதாக ஊடகங்களில் செய்தி வெளியானது. இந்தக் கும்பல் குறித்த முழு விபரங்களை 'நக்கீரன்' ஏடு வெளியிட்டது. படங்கள், வீடியோக்களை வெளியிட்டது. எந்தெந்த நபர்கள் இதில் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள் என்று அந்த இதழ் தொடர்ந்து செய்தி வெளியிட்டது, இதில் சம்பந்தப்பட்ட ஹரீஸ் என்பவருக்கும் அன்றைய அ.தி.மு.க. அமைச்சர் ஒருவரின் மகனுக்கும் தொடர்பு உள்ளது என்று செய்தி வெளியானது.

அந்த ஹரீஸும் கைது செய்யப்பட்டுள்ள ரிஸ்வந்தும் நண்பர்களாக இருந்துள்ளார்கள். இந்த விவகாரம் வெளியானதும் நக்கீரன் இதழுக்கு பேட்டி கொடுத்த ஹரீஸ் அனைவரையும் மிரட்டினார். முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பேரைச் சொல்லித்தான் அவர் மிரட்டினார்.

சி.பி.சி.ஐ.டி. மூலமாக இந்த விவகாரத்தை மறைக்க நினைத்தது அ.தி.மு.க. அரசு. ஆனால் உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி சி.பி.ஐ.க்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது. அந்த சி.பி.ஐ.யிடம் ஆவணங்களை ஒப்படைக்காமல் காலதாமதம் செய்தார்கள். நீதிமன்றம் கடுமையான உத்தரவுகளை போட்ட பிறகுதான் கொடுத்தார்கள். இதை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைக்கிறார் பழனிசாமி. 2019 சம்பவத்துக்கு 2025 ஆம் ஆண்டுதான் தீர்ப்பு வந்தது.

**ஆனால் சென்னை சம்பவத்தில் புகார் கொடுத்த அன்றைய தினமே குற்றவாளி கைது செய்யப்பட்டார். 157 ஆவது நாளில் தீர்ப்பு வந்துவிட்டது. தனது கடந்த காலக் கயமைத்தனங்களை மறைப்பதற்காக துடுக்கான அறிக்கைகளை விடுவதை பழனிசாமி நிறுத்த வேண்டும். மக்களால் மூலையில் உட்கார வைக்கப்பட்ட பழனிசாமிக்கு அடக்கம் தேவை.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.5.2025) தலைமைச் செயலகத்தில், 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் குடும்பத்தைச் சேர்ந்த 9 மாணவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்வின் போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் முனைவர் மா. வள்ளலார் ஆகியோர் உடனிருந்தனர்.

### 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற

# முகாம் வாழ் இலங்கைத் தமிழர் மாணவர்கள் 9 பேருக்கு தலா ரூ.50 ஆயிரம் பரிசுத்தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மே 31 -**

**10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற முகாம் வாழ் இலங்கைத் தமிழர் மாணவர்கள் 9 மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.5.2025) தலைமைச் செயலகத்தில், 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுள் 9 மாணவ, மாணவியர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி, வாழ்த்தினார்.

2021- 22 சட்டமன்ற கூட்டத் தொடரின்போது பேரவையில், முதலமைச்சர் அவர்கள் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு இனி பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்து தருவதை இந்த அரசு உறுதி செய்யும் என்று அறிவித்ததுடன், இலங்கை அகதிகள் முகாம் என்பதை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்று பெயர் மாற்றம் செய்தும் அறிவித்தார்.

மேலும், அவர்களின் நல் வாழ்வுக்காக 10,469 புதிய வீடுகள் கட்டித்தரப்படும் என்று அறிவித்தார். அவற்றில் 3000 வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 7469 வீடுகள் கட்டும் பணிகள் நடைப்பெற்று வருகிறது.

அதுமட்டுமின்றி, முகாம் வாழ் இலங்கை தமிழர்கள் 14,316 நபர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்குதல் போன்ற தமிழ்நாடு அரசின் அனைத்து நலத்திட்டங்களும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும், நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், இல்லம் தேடி கல்வி போன்ற அனைத்து கல்வி சார்ந்த திட்டங்களும் முகாம் வாழ் மாணவர்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

அத்துடன், மாதாந்திர பணக் கொடையாக குடும்பத் தலைவருக்கு ரூ.1000/, குடும்ப உறுப்பினர்களுக்கு ரூ.750/, குழந்தைகளுக்கு ரூ.300/ என்று இருந்ததை முறையே ரூ.1500/-, ரூ.1000/-, ரூ.500/- என்று உயர்த்தி வழங்கப்படுவதோடு, இலவசமாக அரிசியும் வழங்கப் படுகிறது.

மேலும், ஆண்டுதோறும் இலவசமாக துணிமணிகள், ஐந்து எரிவாயு உருளைகளுக்கான மானியம் வழங்கப்படுவதுடன், இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை இலவசமாக சமையல் பாத்திரங்களும், போர்வைகளும் வழங்கப்படுகிறது.

இத்திட்டங்களின் மூலம் 19,666 குடும்பங்கள் பயனடைந்து வருகின்றனர்.

இவ்வரசு பொறுப்பேற்றவுடன் முதன் முதலாக முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கு 7,065 இலவச எரிவாயு இணைப்பும், 2404 நபர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சியும் வழங்கப் பட்டுள்ளது.

மேலும், முகாம் வாழ் மாணவர்களின் கல்வி கற்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் விதமாகவும், இடைநிற்றலை தவிர்க்கும் விதமாகவும் இளநிலை கலை, அறிவியல், வணிகம் மற்றும் பட்டயப்படிப்புகள் பயிலும் 1641 மாணவர்களுக்கு 2 கோடியே 11 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயும், இளநிலை பொறியியல் படிப்பு பயிலும் 185 மாணவர்களுக்கு 1 கோடியே 26 இலட்சத்து 18 ஆயிரத்து 667 ரூபாயும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது,

இந்நிலையில், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் இருந்து, 2024 - 25 ஆம் கல்வி ஆண்டில், பத்தாம் வகுப்பில் 937 மாணவர்களும், 11ஆம் வகுப்பில் 827 மாணவர்களும் மற்றும் 12ஆம் வகுப்பில் 722 மாணவர்களும் பொதுத்தேர்வு எழுதியுள்ளனர், இவர்களில் பலர் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றுள்ளனர்.

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும், அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை என்ற அய்யன் வள்ளுவரின் குறளுக்கேற்ப இம்மாணவர்களின் மேற்படிப்பிற்கு உதவிடும் வகையில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுள் 9 மாணவர்களுக்கு தலா ரூ.50,000/ பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் நேற்று முன்தினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார் ஆகியோர் உடனிருந்தனர்.

### இன்று மதுரைக்கு வருகை தரும்


# முதல்வருக்கு மதுரை மாவட்ட தி.மு.க. சார்பாக உற்சாக வரவேற்பு!


## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் பி.மூர்த்தி – கோ.தளபதி எம்.எல்.ஏ. – மு.மணிமாறன் அறிக்கை!


*மதுரை, மே 31 -*

*மதுரையில் நடைபெற உள்ள தி.மு.க. மாநில பொதுக்குழுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக விமான மூலம் இன்று (31 ஆம் தேதி) காலை 11 மணியளவில் மதுரை விமான நிலையம் வரும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் இரு வண்ணக் கொடி ஏந்தி உற்சாக வரவேற்பு கொடுக்க உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி, கோ.தளபதி எம்.எல்.ஏ., மு.மணிமாறன் ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.*

*அதன் விபரம்:-*







*இந்தியாவே வியக்கத்தக்க வகையில் மாபெரும் வரலாறு படைக்கக்கூடிய தி.மு.க. மாநில பொதுக் குழுக் கூட்டம் வரும் 1ஆம் தேதி மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.*

*மேலும் தமிழ்நாடே திரும்பி பார்க்கும் வகையில் மாபெரும் ரோடு ஷோ நிகழ்ச்சிஇன்று (31ஆம் தேதி) மாலை நடைபெற உள்ளது.*

*வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 31ஆம் தேதி சனிக்கிழமை காலை 11 மணியளவில் மதுரை விமான நிலையம் வந்தடைய உள்ளார்.*

*அது சமயம் கழகத்தினர் கையில் இரு வண்ண கொடியேந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுத்து உற்சாகப்படுத்தும் வகையில் பங்கேற்க வேண்டும்.*

*மேலும் விமான நிலையத்தில் கொடுக்கப்படும் வரவேற்பு எல்லோரும் போற்றத்தக்க வகையில் இருக்க வேண்டும்.*

*எனவே இந்த சிறப்பு மிக்க வரவேற்பு நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த மதுரை மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளாக உற்சாகத்துடன் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென மதுரை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.*